சுற்றுநிருப இல. 6/98.

எனது இல. என்ஈபி/சிஓ/எஸ்ஈ/ஜிஈஎன்--13
கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்,
வடக்கு கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.
22.09.1998.

தலைவர்/பொது முகாமையாளர்,
சகல பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்களுக்கும்,

<u>கிருமி நாசினிகளின் விற்பனையைக் கட்டுப்படுத்தல்</u>

நாட்டில் அதிகரித்து வரும் தற்கொலைச்சம்பவங்களைத் தடுப்பதற்கு கிருமிநாசினிகள் இலகுவாகப் பெறக்கூடிய நிலையைத் தடுப்பதும், விற்பனையைக் கட்டுப்படுத்தவும் அவசியம் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக உணவுப் பொருட்கள் கால்நடைக் கான உணவு என்பன விற்கப்படும் கடைகளில் கிருமிநாசினிகளையும் இருப்புச் செய்வதால் உணவுப் பொருட்கள் நச்சுத் தன்மையை அடைவதும் நிகழ்கிறது. இக் காரணங்களால் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை விற்பனை நிலையங்களில் கிருமிநாசினிகளை விற்பனைக்கு வைத்திருக்கக் கூடாதென தாங்கள் வேண்டப்படுகிறீர்கள். கிளை நிலையங்களிற்கான பொருட்கள் ஏற்றிச் செல்லும் பொழுது கிருமிநாசினிப் பொருட்களும் ஒரே வண்டியில் ஏற்றிச் செல்வதும் அவதானிக்கப்பட்டுள்ளது. கிருமிநாசினி தடைச்சட்டத்தின் பிரிவு 16 இன்படி உணவுப் பொருட்களோடு கிருமிநாசினிப் பொருட்களை ஒன்றாக இருப்புச் செய்தல், விற்பனை செய்தல், ஏற்றியிறக்கல் ஆகியன தடை செய்யப்பட்டுள்ளது.

கிருமி நாசினி அதிகரித்த பாவனையினால் ஏற்படும் தற்கொலை மரணங்கள்பற்றி ஆராய்வதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட குழுவின் விதப்புரையின்படி கூட்டுறவுச்சங்க கிளை விற்பனை நிலையங்களில் கிருமிநாசினி விற்பனை செய்யப்படக் கூடாது. இவ்விதப்புரைக்கு அமைய கூட்டுறவுச் சங்கங்களின் கிருமி நாசினி விற்பனையை படிப்படியாக கட்டுப்படுத்துமாறும் கமநலசேவை நிலையங்கள் போன்றவற்றில் இவ் வேலையை ஒப்படைக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்.

. சண்முகலிங்கம்,
கூ. அ. ஆணையாளரும்,
கூ. ச. பதிவாளரும் (வகி)
ஒ/ப.

பிரதி: 1) சகல கூ. அ. உ. ஆணையாளர்களுக்கும்.

2) கூ. அ. ஆணையாளரும்,
கூ. ச. பதிவாளரும்,
கொழும்பு.